தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, சித்திரை 6

2012 ஏப்ரல் 18, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு."

மணற்கேணியில் எந்த அளவிற்குத் தோண்டுகிறோமோ, அந்த அளவிற்கு நீர் ஊறும். அதுபோல மக்கள் எந்த அளவிற்குக் கற்கிறார்களோ, அந்த அளவிற்கு அறிவு பெருகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***6292—திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2012 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். 1½ கோடி தொண்டர்களின் உயிர் மூச்சு, 7 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், அவையில் வீற்றிருக்கும் அனைவருக்கும் குலதெய்வம், அம்மா அவர்களை வணங்கி, திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதியில் 1984–ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் புறநகர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நவீன நகரமாக உருவாக்கப்பட்ட அண்ணா நகர், போலீஸ் காலனி பகுதிகளில் பாதாளச் சாக்கடை குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. இதன் காரணமாக, கழிவுநீர் வெளியேற வழி இல்லாமல், வீடுகளின் உள்ளேயே தேங்கி விடுகிறது. இதனால் மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். எனவே, பாதாளச் சாக்கடை குழாய்களைச் சீர் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984–ல் உருவாக்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியுள்ள நிலையிலே அதற்கான* new equipments *வந்திருக்கின்ற இந்த நிலையிலே, எங்கெங்கெல்லாம் பழுதுபட்டிருக்கிறதோ, அந்தப் பழுதை சரி செய்து, சீர் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே, தமிழகம் ஒரு தூய்மையான மாநிலமாக உருவாக்கப்பட வேண்டும் என்று சூளுரைத்து, அதற்கு ஏற்றவாறு தமிழகத்தினுடைய நகராட்சிகளானாலும் சரி, பேரூராட்சிகளானாலும் சரி, மாநகராட்சிகளானாலும் சரி, அவற்றின் உள் கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதற்கு ஆணையிட்டதன் அடிப்படையிலேதான், இந்த நிதியாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அறிவுரையோடு, ஆணையோடு, நகராட்சிகளில் மட்டும் 22 நகரங்களில் 2,355 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. அதேபோல, 28 பேரூராட்சிகளில், 756 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே நிறைவேற்றப்பட இருக்கிறது. அதன் அடிப்படையிலே, தொடர்ந்து வருகின்ற ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த நகரமும் இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்தில் குமரசன்பேட்டை, சத்தியா நகர் ஆகிய 2 பகுதிகளிலும் குடிநீர்த் திட்டமும், பாதாளச் சாக்கடைத் திட்டமும் நடைபெற்று முடிந்துவிட்டன. ரோடு வேலையும் முடிந்துவிட்டது. இரண்டு பக்கமும் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தருமபுரி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிவுற்று, கழிவுநீரை வெளியேற்றி, சுத்திகரிக்கக்கூடிய நிலையம்கூட தயார் நிலையில் இருக்கின்றது. அது முடிவுற்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக அங்கே கழிவுநீர்க் கால்வாய்கள் வேண்டுமென்று கோருகிறார். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அங்கே இருக்கின்ற நகராட்சி நிருவாகத்திடம் எடுத்துச்சொல்லி, தேவைப்படின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நெடுநாட்களுக்கு முன்பே பாதாளச் சாக்கடைகள் அமைக்கப்பட்டு விட்டன. அப்போதிருந்த மக்கள் தொகைக்கேற்ப அமைக்கப்பட்ட அந்த பாதாளச் சாக்கடைகளுடைய கொள்ளளவு இப்போது போதவில்லை. ஆகவே, பிரதான சாலைகளிலேயே சாக்கடை பொங்கி, அந்தச் சாலை முழுவதையும் அசிங்கப்படுத்துகின்ற நிலையில் இருக்கின்றது. ஆகவே, அதனை நவீனப்படுத்தவும், அகலப்படுத்தவும், விரிவுபடுத்தவும், புதிய கால்வாய்களை*

2012 ஏப்ரல் 18]

அமைக்கவும், போர்க்கால அடிப்படையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று நான் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளை உள்ளிணைத்து, இந்த நிதியாண்டிலேயே அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டமும் நிறைவேற்றப்பட வேண்டும், அதேபோல் குடிதண்ணீரும் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இந்த நிதியாண்டில் மட்டும், புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்க 700 கோடி ரூபாயும், அந்தப் பகுதிகளில் வெளியேறுகின்ற கழிவு நீரை வெளியேற்றி சுத்திகரிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக 1,300 கோடி ரூபாயும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் பழைய காலங்களில் பெரிய பெரிய பங்களாக்கள் கட்டப்பட்டிருந்தன. ஆனால், அந்த பங்களாக்களை எல்லாம் இப்போது இடித்து, தரைமட்டமாக்கிவிட்டு, apartments கட்டியதன் காரணமாக, பத்து நபர்கள் வாழக்கூடிய அந்த இடத்தில், இன்று 200 நபர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி நியாயமான கேள்வி. அதற்கேற்றவாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரைகள் கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இருக்கின்ற கால்வாய்களைச் சீரமைத்து, கழிவு நீர் வேகமாகச் செல்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து, கழிவு நீர் வெளியே வராமல், சென்னை மாநகராட்சி ஒரு தூய்மையான மாநகராட்சியாக உருவாக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் எனது சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் துவங்கப்பட்டு, அந்தப் பணிகள் முடிவடையாமலேயே, ஒப்பந்தக்காரர்களுக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டார்கள். ஆகவே, அந்தப் பணிகள் இன்னும் முழுமை அடையாமல் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து சீர் செய்வாரா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பணி ஒப்படைக்கப்பட்ட அந்த agencies வேலையைச் செய்யாமல் விட்டு விட்டுச் சென்றது உண்மை. பணியைச் செய்வார்களா என்பதைவிட, செய்வதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆரம்பித்து விட்டார்கள். அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. ஒப்புந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டவுடன் பணிகள் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராதாபுரம் தொகுதியில் வள்ளியூர், திசையன்விளை, பணங்குடி என்ற மூன்று பேரூராட்சிகள் இருக்கின்றன. அந்த மூன்று பேரூராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை இந்த நிதியாண்டிலேயே செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், இந்த நிதியாண்டில் புதிய அறிவிப்புகளில் 28 பேரூராட்சிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த 28 பேரூராட்சிகளில் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி வரவில்லையென்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று வருகின்ற நிதியாண்டுகளில், நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டி, அலங்காநல்லூர், சோழவந்தான், பாலமேடு ஆகிய பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்துவதாக அதிகாரிகள் கூறியுள்ளார்கள். ஆனால், அதைச் செயலாக்காமல், இதுவரையில் அரையுங்குறையுமாக இருப்பதாகக் கூறுகிறார்கள். குறிப்பாக, அலங்காநல்லூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தில், அந்தக் கழிவு நீர் சென்றடையக்கூடிய டேம் இல்லையென்று கூறுகிறார்கள். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகின்றேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கழிவுநீரை வெளியேற்றி, அந்த கழிவுநீரைச் சுத்திகரிக்கத் தேவைப்படுகின்ற நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லையா என்று கேட்கிறார். அப்படி ஆர்ஜிதம் செய்யப்படவில்லையென்று சொன்னால், அதை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவுறுத்தியபடி, எல்லா

பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று விரிவான திட்ட அறிக்கையை ஏற்படுத்திவிட்டார்கள். ஒவ்வொரு நகராட்சிக்கும், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் எவ்வளவு நிதியாதாரம் வேண்டும் என்று—இப்போது திருக்காட்டுப்பள்ளி குறித்து மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்குக்கூட, அங்கே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 25.13 கோடி ரூபாயில் திட்டம் தயார் நிலையில் இருக்கிறது—நிதியாதாரத்தை உருவாக்கி அடுத்த நிதியாண்டிலோ, அதற்கடுத்த நிதியாண்டிலோ, நிதியாதாரத்திற்கேற்றவாறு இந்த நகராட்சிகளை இணைத்து பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சி, சேத்தியாதோப்பு பேரூராட்சி, கங்கைகொண்டான் பேரூராட்சி ஆகிய 3 பேரூராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்படுமா? மேலும், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் அருகில் கங்கைகொண்டான் பேரூராட்சி உள்ளதால், அடிக்கடி வெடி போடுவதால் அங்குள்ள போர்வெல் எல்லாம் வீணாகி விடுவதால், கம்மாபுரம் கிராமத்தில் உள்ள அனைத்து குடிநீர்ப் பைப்புகளும் பழுதடைந்துவிடுகின்றன. மேலும், கங்கைகொண்டான் பேரூராட்சிப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடும் அதிகமாக உள்ள காரணத்தால், அங்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இது பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றிய கேள்வி.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு கேள்வி குடிதண்ணீர் பற்றியது. மற்றொரு கேள்வி, குடிக்கின்ற தண்ணீர் கழிவுநீராக*

2012 ஏப்ரல் 18]

மாறுகின்றபோது அந்தக் கழிவுநீரை வெளியேற்றுவது குறித்ததாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்ததன்படி, 529 பேரூராட்சிகளுக்கும் திட்ட மதிப்பீடு தயார் நிலையில் இருக்கிறது. அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த மூன்று பேரூராட்சிகளும் உரிய நேரத்தில் எடுத்துக்கொள்ளப்படும். மேலும், அங்கே நிலக்கரிச் சுரங்கம் இருக்கிற காரணத்தால், வெடி வைப்பதால் அங்கே இருக்கிற ஆழ்துளைக் கிணறுகள் பாதிக்கப்படுகின்றன என்று கூறியிருக்கிறார்கள். எனவே, அங்கே கூட்டுக் குடிநீர்த் திட்டம் தேவை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து ஆய்வு செய்து, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருகிறபட்சத்தில், அந்தப் பகுதி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைக் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

திரு. ஆர். சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன். மற்றும் என்னுடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'மற்றும்' இல்லை. அத்தோடு முடியுங்கள். மற்றுமுள்ள கேள்விகளை வேறொரு சந்தர்ப்பத்தில் கேட்கலாம். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள 125 நகராட்சிகளில், ஏற்கெனவே பணிகளை நிறைவேற்றியுள்ள நகராட்சிகளைத் தவிர்த்து, பணிகளை எடுத்துக் கொண்டிருக்கிற நகராட்சிகளைத் தவிர்த்து, மீதமுள்ள அத்தனை நகராட்சிகளுக்கும் திட்டம் தயார் நிலையில் உள்ளது. அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த நகராட்சியையும், இந்த 4 ஆண்டு காலத்திற்குள்ளாக எடுத்து நிறைவேற்றிக் கொடுக்கப்படும்

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.*

திரு. து. முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைவில் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகரம் மிகப் பெரிய நகரம். அதை ஆய்வு செய்து அரசு வேகமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

திரு. எம். ரெங்கசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலத் திட்டங்களை நாள்தோறும் அளித்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தஞ்சை நகரத்திலே கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கி வைக்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டம், அவர்களுடைய ஆட்சிக் காலம் முடிகின்ற வரையிலும் முடிவு அடையாமலேயே இருந்தது. அதற்குப் பின்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னால், அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி, அது இப்போது முழுமை அடைகின்ற நிலையிலே இருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சீக்கிரம் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. எம். ரெங்கசாமி: *அந்த நகரம் நிறைய சந்துகளால் உருவாக்கப்பட்ட நகரம். பல இடங்கள் பாதாளச் சாக்கடைத்*

2012 ஏப்ரல் 18]

திட்டத்திலே சேர்க்கப்படாமல் இருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட இடங்களையெல்லாம், ஒரு புதிய கூடுதல் திட்டமாக பாதாளச் சாக்கடைத் திட்டத்திலே சேர்த்து அதை நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. பல்வேறு இடங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. காரணம், சிறிய சிறிய சந்துகளில் உரிய இடங்களில் விடுகின்றபோது, அதை அப்படியே விட்டுவிடுகிறார்கள். அதையும் எடுத்து ஆய்வு செய்து, அதையும் இணைக்கின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

சார் பதிவாளர் அலுவலகம்

***7627—திரு. கே.பி. நாகராஜன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வெள்ளிமேடுபேட்டையில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?.